2013 மே 13]

அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பொதுப் பணித் துறை மற்றும் விவசாயத் துறை இரண்டும் இணைந்து அங்கு புதிய திட்டத்தை உருவாக்க பணிகள் நடைபெற்றுகொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 479, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

479—

கால்நடை மருத்துவமனை

***4936—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரத்திலுள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற ராதாபுரத்தில் உள்ள கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தவேண்டுமென்று சொன்னால், அங்கு 10,000 கால்நடை அலகுகள் இருக்கவேண்டும். தற்போது, 9,700 கால்நடை அலகுகள்தான் இருக்கின்றன. இந்த ஆண்டு 300 கால்நடை அலகுகளின் எண்ணிக்கை உயர வாய்ப்பிருக்கிறது. எனவே, 10,000 ஆக அலகு உயரும்போது அடுத்த ஆண்டு அங்கு மருத்துவமனை அமைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும்.

மேலும், மாண்புமிகு அம்மா அவர்களை நம்பி கெட்டவர்கள் யாரும் இல்லை. நம்பாமல் கெட்டவர்கள்தான் அதிகம் இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு அம்மா அவர்களை நம்பி இருக்கின்ற திரு. மைக்கேல் ராயப்பன் அவர்களின் பகுதியில் விதிகளுக்குட்பட்டு மாண்புமிகு அம்மா

அவர்களுடைய அரசு அடுத்த ஆண்டு மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

முற்பகல் 10-45

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அக்ஷய திருதியை நன்னாளில் சிறப்புமிக்க இந்த மாபெரும் மன்றத்தில், வாழும் தெய்வமாக அமர்ந்திருக்கும் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கு இன்னும் 300 கால்நடைகள்தான் குறைவாக இருக்கின்றன. அடுத்த ஆண்டில் அதை மருத்துவமனையாக உயர்த்தித் தருவோம் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டே தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எதுவும் விதிகளுக்குட்பட்டுதான் செய்யும். எனினும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மைக்கேல் ராயப்பன் அவர்கள் கவலைப்பட வேண்டாம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய திட்டமான ஏழைகளிலும் ஏழையான கிராமப்புற விவசாயிகளுக்கு விலையில்லா கறவைப் பசுக்களும், விலையில்லா ஆடுகளும் வழங்குகின்ற திட்டத்தின்மூலமாக, இந்த ஆண்டு உங்களது தொகுதிக்குட்பட்ட கிராமங்களுக்கு வழங்கவிருக்கிறோம். அதன்மூலமாக இந்த ஆண்டே அங்கே, அவற்றின் எண்ணிக்கை உயர வாய்ப்பு இருக்கிறது. அதனடிப்படையிலே, 10,000 அலகுகள் அங்கே நிறைவேறும்போது, உங்கள் தொகுதியில் நிச்சயமாக ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2013 மே 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.*

திரு. சி. மைக்கேல் ராயப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நம்பி வந்தவர்கள் என்றும் கெடுவதில்லை' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று, தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இலவசமாக வழங்குகின்ற இலவச ஆடுகளும், மாடுகளும் இன்னும் ஒரு சில மாதங்களிலே கிடைக்கவிருப்பதால் 10,000 என்ற அந்த இலக்கை இன்னும் ஒரு சில மாதங்களிலே அடைந்துவிடும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாக உரிய ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 480, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

480—

பேருந்து வசதி

***5511—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கியிலிருந்து திருப்புவனவாசலுக்கு கரூர் வழியாக பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி-திருப்புவனவாசலுக்கு, கரூர் வழியாக அரசுப் பேருந்து புறநகர் தடம் எண் 483 மூலம் 4 நடைகளும், இரண்டு தனியார் பேருந்துகள்மூலம் 16 நடைகளும் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது, பயணிகள் சராசரியாக 37 சதவிகிதம் மட்டுமே பயணம் செய்கின்றனர். எனவே, இப்பகுதி மக்களுக்கு